அறிமுகம்

# மத்தேயு சுவிசேஷம்: "இராஜரீக சுவிசேஷம்"

பழைய ஏற்பாடு முழுவதிலும், ஆதியாகமத்தில் இருந்து மல்கியாவின் தீர்க்கதரிசனப் புத்தகம் வரையிலும், வரவிருந்த இராஜா மற்றும் தேவனுடைய இராஜ்யம் பற்றிய ஆய்வுக்கருத்து முன்னுரைக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 3:15; 49:10; 2 சாமுவேல் 7:16; சங்கீதம் 2:6-8; மல்கியா 3:1). அந்த இராஜா மனிதராகவும் தெய்வீகமானவராகவும் இருப்பார் என்று தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர் (ஏசாயா 7:14; 9:6, 7; தானியேல் 7:13, 14). செப்பனியா தீர்க்கதரிசனப் புத்தகத்தின்படி, அவர் "இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்" (செப்பனியா 3:15) என்று கூறப்படுபவராக இருப்பார். அவர் "நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவருமாக" இருப்பார், மற்றும் அவர் நிறைவாக வந்தபோது, பூமியில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் அவரை ஆராதிக்கக் கூடியதாக இருக்கும் (சகரியா 9:9; 14:17). இந்த மனிதர்களில் எவரும், தாங்கள் தீர்க்கதரிசனமாகக் கூறியது என்ன என்பதை முற்றிலுமாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை என்று பேதுரு நமக்கு நினைவுபடுத்தினார் (1 பேதுரு 1:10, 11).

நான்கு சுவிசேஷங்களிலும், இந்த இராஜாவின் முழு அடையாளத்துவமும் இயல்பும் முன்வைக்கப்பட்டு விளக்கப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் அமைவில் முதலாவதாக உள்ள மத்தேயு சுவிசேஷம். முதலாவது எழுதப்பட்ட சுவிசேஷ விபரமாக, தொடக்ககாலக் கல்வியாளர்களால் சீராகக் கருதப்பட்டது.[1] இருப்பினும் எண்ணற்ற நவீனக் கல்வியாளர்கள் மாற்கு சுவிசேஷமே முதலாவதாக எழுதப்பட்டது என்ற கருத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

மத்தேயு, மாற்கு, லூக்கா ("பொருட்சுருக்க சுவிசேஷங்கள்") ஆகிய சுவிசேஷப் புத்தகங்கள், பல இடங்களில் ஒன்று போல் உள்ளன என்ற உண்மையானது, எழுதப்பட்டவற்றின் இலக்கியச் சார்புத் தன்மை மற்றும் அவற்றின் வரிசை முறைமை பற்றிய கேள்விகளுக்கு வழிநடத்தியுள்ளது. இந்தப் பிரச்சனை பொதுவாக "பொருட்சுருக்கப் பிரச்சனை" என்று அழைக்கப் பட்டுள்ளது. ஆகையால், மொழியியல் பற்றிய படிப்புகளின் அடிப்படையில், புதிய ஏற்பாட்டுக் கல்வித்துவத்தின் கலைகள், மாற்கு சுவிசேஷமே முதலாவது எழுதப்பட்டது என்பதில் மனநிறைவு கொண்டுள்ளன. இந்தக் கண்ணோட்டமானது, மாற்கு, மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களுக்கு இடையில் உள்ள உள் உறவுகள்பற்றிய வாசிப்பையே முழுமையாகச் சார்ந்துள்ளது. நமக்கு நான்கு சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுப்பதற்கு, மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரைப் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு வழிநடத்தினார் என்பதை நாம் நிச்சயத்துடன் அறிவதில்லை. ஒருவேளை

அவர்கள் ஒருவர் மற்றவரைச் சார்ந்து இருந்திருக்கலாம்; ஒருவேளை அவர்கள் பொதுவான ஆதாரமூலம் ஒன்றைப் பயன்படுத்தி இருக்கலாம். ஒருவேளை அவர்கள் இவ்விரண்டிலும் சிலவற்றைச் செய்திருக்கலாம். மொழியியல் சார்ந்த படிப்பினால் மாத்திரம் எந்த சுவிசேஷப் புத்தகம் முதலாவது வந்தது என்பதைக் கண்டறிதல் சாத்தியமாக இருப்பதில்லை.[2]

ஒரு கருத்தில், தேவன் நமக்கு நான்கு சுவிசேஷங்களைத் தரவில்லை; அவர், நான்கு மாறுபட்ட கருத்து நோக்குகளில் முன்வைக்கப் பட்டுள்ள ஒரே சுவிசேஷச் செய்தியையே நமக்குக் கொடுத்தார். ''சுவிசேஷம்'' என்பதற்கான (*euangelion* என்ற) கிரேக்க வார்த்தையானது, பூமிக்குக் கிறிஸ்துவின் வருகையையும், அவருடன் மனிதகுலம் முழுமைக்கும் இரட்சிப்பு அளித்தலைக் கொண்டுவருதலையும் விவரிப்பதற்குப் புதிய ஏற்பாட்டில் முதலில் பயன்படுத்தப்பட்டது. "சுவிசேஷம்" என்ற வார்த்தையை மாற்கு, தமது சுவிசேஷத்தின் முதல் வார்த்தையில் பயன்படுத்தியது நன்றாக இருக்க முடியும், மற்றும் அது கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய மற்ற மூன்று பதிவேடுகளுக்கும் பின்னர் தலைப்பாக ஆயிற்று.

மத்தேயு சுவிசேஷம் "இராஜரீக சுவிசேஷம்" என்று காணப்பட முடியும், ஏனென்றால் அது, வந்திருந்த ஒரு இராஜாவாக, நசரேயனாகிய இயேசுவை முன்வைக்கிறது. "இராஜ்யம்" (*basileia*) என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் 162 முறைகள் காணப்படுகிறது.[3] இந்தச் சொற்றொடரானது தனது பல்வேறு வடிவங்களில், மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரம் ஐம்பத்தி ஐந்து முறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது! ''பரலோக இராஜ்யம்'' என்பது மத்தேயு சுவிசேஷத்திற்கு உரிய தனிச்சிறப்பான சொல்விளக்கமாக, முப்பத்தி இரண்டு முறைகள் வருகிறது.[4] ''தேவனுடைய இராஜ்யம்'' என்ற சொல்விளக்கம், மற்ற சுவிசேஷங்களில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டிருந்தாலும், மத்தேயு சுவிசேஷத்தில் இது நான்கு முறை மாத்திரம் பயன்படுத்தப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இயேசு, குறைந்த பட்சம் முப்பத்தி ஐந்து முறைகள் "இராஜா" என்று குறிப்பிடப் பட்டுள்ளார், மற்றும் அவரது "ஆளுகை" என்பது குறைந்த பட்சம் ஆறு முறைகள் குறிப்பிடப் பட்டுள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில் அவர், அடிக்கடி - ஒருவேளை முப்பத்தி இரண்டு முறைகள் - "கர்த்தர்" (*kurios*) என்று குறிப்பிடப் பட்டும் இருக்கிறார். மத்தேயு ஒருவர் மாத்திரம் "சபை" (*ekklēsia*) (16:18; 18:17) என்ற வார்த்தையைப் பயன்படுத்திய ஒரே சுவிசேஷ எழுத்தாளராக இருந்தார், இது ''மக்கள் கூட்டம்,'' ''ஒரு சபைக்குழுமம்'' அல்லது "வெளியே அழைக்கப்பட்ட மக்கள் குழு" என்று அர்த்தப் படுத்துகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மற்றும் நிருபங்களில் இவ்வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளது, ஆனால் ''இராஜ்யம்'' என்பது அந்தப் புத்தகங்களில் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

தேவனை ஒரு பிதாவாகக் கண்ணோக்கும் மறைமுகக் குறிப்புகள் மத்தேயு சுவிசேஷத்தில் அடிக்கடி காணப்படுகின்றன. இயேசுவைக் குறிப்பிடுவதற்கு ''தேவனுடைய குமாரன்'' என்ற சொல்விளக்கம் ஏழு முறைகள் வருகிறது. R. T. ஃபிரான்ஸ் அவர்கள், இந்தக் குறிப்புப் பெயரைப்பற்றிப் பேசும் நான்கு பேச்சாளர்களைப் பட்டியலிட்டார்:

> பொதுவாகவே ... தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசுவைப்

> பற்றிப் பேசும் மொழிநடை, அவரது சொந்த வார்த்தைகளில் காணக்கிடைப்பதில்லை, ஆனால் தேவன் தாமே (3:17; 17:5) பேசியது, தேவனுடைய வார்த்தையைச் சாத்தான் எதிரொலித்தது (4:3, 6), இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவுடைய அசுத்த ஆவிகளால் கூறப்பட்டது (8:29) அல்லது இயேசுவைப் பற்றிய புரிந்துகொள்ளுதல் ஆழப்படத் தொடங்கிய நிலையில் அவரது சீஷர்கள் பேசியது (14:33; 16:16, 17) ஆகியவர்களால் அவரைப் பற்றிப் பேசப் பட்டவற்றில் காணக்கிடைக்கிறது.[5]

"மனித குமாரன்" என்ற சொற்றொடர், இயேசுவைப் பற்றிக் கூற மிகவிருப்பமான சுய குறிப்புப் பெயர் என்ற வகையில், மத்தேயு சுவிசேஷத்தில் முப்பத்தியோரு முறை காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டில், இந்தச் சொற்றொடர் அடிக்கடி (எசேக்கியேல் புத்தகத்தில் உள்ளது போன்ற வகையில்) ஒருவரின் மனிதப்பண்பு பற்றி அடிக்கடி வலியுறுத்துகிறது, ஆனால் இது, மனித குமாரனைப் போன்ற ஒருவர் மேகங்களில் வருவதையும், நீண்ட ஆயுசுள்ளவரிடமிருந்து அவர் நித்திய இராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வதையும் குறிப்பதற்குத் தானியேல் 7:13, 14ன் தீர்க்கதரிசனத்திலும் தோன்றுகிறது.

## எழுத்தாளரும் தலைப்பும்

எழுத்தாளரின் பெயர் (மத்தேயு சுவிசேஷம் என்ற) இந்த விபரத்தின் வசனப்பகுதிக்குள் குறிப்பிடப் படுவதில்லை. இருப்பினும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, இந்தப் புத்தகம் "மத்தேயு எழுதிய சுவிசேஷம்" என்ற அறியப்பட்டிருந்தது. டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், தொடக்க காலத்திலேயே இந்த சுவிசேஷத்தை எழுதியவர் மத்தேயுதான் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்ததாக நம்பினார்:

> இது வரையிலும் கிடைக்கப் பெற்றுள்ள தரவுகளில் இருந்து, வேறு எந்த வகையிலும் மத்தேயு என்பவர், அப்போஸ்தலர்கள் மத்தியிலோ அல்லது தொடக்ககால சபையின் மத்தியிலோ, முன்னணி நபராகக் காணப்படவில்லை (அவரது பெயரானது சுவிசேஷ விபரங்கள் தவிர, நடபடிகள் 1:13ல் மாத்திரம் ஒரே முறை குறிப்பிடப்பட்டுள்ளது), எனவே நல்ல காரணம் எதுவும் இன்றி, இந்த சுவிசேஷம் மத்தேயுவினால் எழுதப்பட்டது என்று நம்புவது கடினமானதாக உள்ளது.[6]

இந்தப் புத்தகம், எப்பொழுதாவது வேறு தலைப்பைக் கொண்டிருந்தது என்பதற்கோ அல்லது இது மற்றொரு எழுத்தாளரால் எழுதப்பட்டது என்பதற்கோ உறுதியான நிரூபணம் எதுவும் இருப்பதில்லை. "அல்பேயுவின் குமாரனான" (9:9) மத்தேயு என்ற அப்போஸ்தலரே இந்தத் தொகுப்பை எழுதினார் என்று நம்பக் காரணம் உள்ளது.

"ஆயத்துறையில்" இருந்து மத்தேயுவை இயேசு அழைத்தபோது, அவர் வரிவசூலிப்பவராக இருந்தார் (லூக்கா 5:27). மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் அவர் "லேவி" என்று அழைக்கப்படாதிருக்கையில், மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் "லேவி" என்ற பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது (மாற்கு 2:14, 15; லூக்கா 5:27-29). இதே புத்தகங்களிலும் அப்போஸ்தலருடைய நடபடிகளிலும், அப்போஸ்தலர்களின் பெயர்பட்டியலிலும், இவர் "லேவி"

*என்றல்ல ஆனால் "மத்தேயு" என்றே அழைக்கப்படுகிறார் (மாற்கு 3:18; லூக்கா 6:15; நடபடிகள் 1:13).*

*மத்தேயு, "லேவி" என்றும் அழைக்கப்பட்டிருத்தல், அவர் லேவி கோத்திரத்தில் இருந்து வந்தவர் என்று சுட்டிக்காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லாதுள்ளது. இப்படிப்பட்ட முடிவை மேற்கொள்ள, அவரது பெயர் மாத்திரமே ஆதாரமாகக் காணப்படுவதில்லை. லேவியர்கள் நன்கு அறியப்பட்டவர்களாகவும் பொதுவாக மதிக்கப்பட்டவர்களாகவும் இருந்ததால், ''லேவி'' என்பது யூதர்கள் மத்தியில் பிரபலமான பெயராக இருந்தது. கிறிஸ்துவின் காலத்தில், லேவித்துவ ஆசாரியர்கள் பலர் மோசம் செய்பவர்களாக இருந்திருந்தாலும், மத்தேயு போன்ற ஒரு மனிதர் வெறுக்கத்தக்க வரிவசூலிப்பவர் ஆவதற்காக, ஆசாரியத்துவப் பணியைக் கைவிட்டிருப்பார் என்று நம்புவது கடினமாக உள்ளது.*

*மத்தேயுவின் முந்திய தொழிலான வரிவசூலிப்பவர் என்பது, ஒரு சுவிசேஷ விபரத்தை எழுதுவதற்கான அவரது திறமையுடன் இணைநிற்கிறது. கப்பர்நகூமில் இருந்து வந்த மத்தேயு போன்ற யாரேனும் ஒருவர், கிரேக்கு மற்றும் அரமாயிக் மொழிகளை அறிந்திருப்பார் மற்றும் கணக்குகளைப் பயன்படுத்துதலிலும் பதிவு செய்வதிலும் அவர் திறமை வாய்ந்தவராக இருப்பார். அவர் இயேசுவின் போதனைகளையும் ஊழியத்தையும் பற்றிய விபரங்களைத் தொகுப்பதில் திறமை உள்ளவராக இருந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.[7] இயேசுவின் சீஷர்களுக்கு மத்தேயு ஒரு "பதிவாளராக" பணி செய்தார் என்று சிலர் யூகித்துள்ளனர்.[8]*

## வசனப்பகுதி

*மத்தேயு சுவிசேஷம் அடிக்கடி, ''எபிரெய சுவிசேஷம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு சுவிசேஷம் தோற்றகாலத்தில், யூதர்களுக்காக எபிரெயு/அரமாயிக் மொழியில் எழுதப்பட்டது மற்றும் பிற்பாடு அது கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டது என்பதற்கு, தொடக்க கால சபை எழுத்தாளர்கள் ஒரு சில குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளனர். எசூபியஸ் அவர்களின் கூற்றுப்படி, "மத்தேயு இந்த உரைகளை எபிரெய மொழியில் எழுதினார்'' என்று பாப்பியாஸ் என்பவர் உரைத்தார். ஓரிகன் அவர்கள், சுவிசேஷம் "யூதத்துவத்தில் இருந்து மனமாறியவர்களுக்காகத் தயாரிக்கப் பட்டது, இது எபிரெய மொழியில் வெளியிடப்பட்டது" என்று கூறினார்.[9] அலெக்சந்திரியா நகரத்தைச் சேர்ந்த பேன்த்தனஸ் (சுமார், கி.பி. 170), அவர்களின் கூற்றுப்படி மத்தேயு சுவிசேஷத்தின் எபிரெய மொழிப்பிரதி ஒன்றை பார்த்தலோமேயு, இந்தியாவில் கண்டிருந்தார் என்றும் எசூபியஸ் கூறினார்.[10] இரேனியுஸ் அவர்கள், "பேதுருவும் பவுலும் ரோமாபுரியில் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, மத்தேயு, எபிரெயர்களின் வட்டார மொழியில் எழுதப்பட்ட சுவிசேஷம் ஒன்றையும் வெளியிட்டு சபைக்கு அஸ்திபாரங்களை இட்டுக் கொண்டிருந்தார்'' என்று உரைத்தார்.[11] மத்தேயு யூதேயாவில் இருக்கையில் தமது சுவிசேஷ விபரத்தை எபிரெய மொழியில் எழுதினார் என்று ஜெரோம் அவர்கள் எழுதினார்.[12]*

*மத்தேயு சுவிசேஷம் தோற்றகாலத்தில் எபிரெயு/அரமாயிக் மொழியில் எழுதப்பட்டது என்ற கண்ணோட்டத்திற்குப் பல சிரமங்கள் உள்ளதாக உற்றுநோக்கப் பட்டுள்ளன. முதலாவது, தொடக்கக்காலக் கிறிஸ்தவ*

*இலக்கியங்களில், மத்தேயு சுவிசேஷத்தின் எபிரெய/அரமாயிக் மொழிப் பிரதியிலிருந்து மேற்கோள்கள் எதுவும் அடங்கியிருப்பதில்லை. இரண்டாவது, மத்தேயு சுவிசேஷத்தின் கிரேக்க மொழி வசனப்பகுதி, செப்துவஜிந்த் (LXX) வேதாகமத்தில் இருந்து மேற்கோள்களைக் காண்பிக்கிறது, மற்றும் இந்த உண்மையானது, மத்தேயு சுவிசேஷம் எபிரெய/அரமாயிக் மூலமொழிப் பிரதியில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பதற்கு எதிராக வாதிடுகிறது. மூன்றாவது, கிரேக்க வசனப்பகுதியானது, கிரேக்க மொழியில் மாத்திரமே சாத்தியமாகக் கூடிய வார்த்தை விளையாட்டுகள் பலவற்றைக் கொண்டுள்ளது (6:16; 16:18; 21:41; 24:30).[13] நான்காவது, கிரேக்க மொழி வசனம், ஒரு மொழிபெயர்ப்பாகத் தோன்றுவதில்லை. இந்த உண்மையை லியோன் மோரிஸ் அங்கீகரித்தார்:*

> *மத்தேயு சுவிசேஷம் தோற்றகால யூத அரபிய எழுத்தாக இருந்தது என்பதற்குப் பழங்காலத்தில் பரவலாகக் கருத்தொருமைப்பாடு இருந்தது என்ற உண்மையினால், ஒருபுறத்தில் புதிர் ஒன்று முன்வைக்கப் பட்டுள்ளது, மறுபுறத்தில், நாம் கொண்டுள்ள சுவிசேஷம், தொடக்கத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது, அது ஒரு மொழிபெயர்ப்பு அல்ல என்ற உண்மையினால் புதிர் ஒன்று முன்வைக்கப் பட்டுள்ளது. இதனால்தான் சில கல்வியாளர்கள், கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நமது மத்தேயு சுவிசேஷம், எபிரெயு அல்லது அரமாயிக் மொழியில் எழுதப்பட்டதன் மொழிபெயர்ப்பு அல்ல ஆனால் அதன் புதிய திருத்தப்பதிப்பு ஆகும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.[14]*

*ஜேக் லூயிஸ் பின்வருமாறு முடிவு செய்தார்:*

> *… சபைப்பிதாக்கள் மூலத்தில் இது எபிரெய மொழியில் இருந்ததாகப் பேசினாலும், அவர்கள் கிரேக்க மொழிப்புத்தகத்தையே தனிப்பட்ட வகையில் அறிந்திருந்தனர், தாங்கள் பேசிய எபிரெய மொழிப் புத்தகத்திற்குப் பதிலாக இந்தக் கிரேக்க மொழிப்புத்தகத்தையே அவர்கள் பயன்படுத்தி, இதன் தொடர்பாக உள்ள கடினமான கேள்விக்குப் பதில் அளிக்காமலேயே விட்டுவைத்தனர்.[15]*

*மத்தேயு சுவிசேஷத்தின் எபிரெய மொழிப்பதிப்பு ஒன்று இருந்தது என்றால், இதைப்பற்றி சபைப்பிதாக்களின் உரிமைகோருதல்கள் தவிர இயல்பான ஆதாரம் வேறு எதுவும் நமக்கு இருப்பதில்லை. மூலமொழி எதுவாக இருந்தாலும், இந்தப் புத்தகம், யூதர்களின் மேசியாத்துவ நம்பிக்கைகளின் நிறைவேற்றமாக கிறிஸ்து இருந்தார் என்று அவர்களை நம்பி இணங்கவைத்தல் என்ற நோக்கத்திற்காகவே எழுதப்பட்டது என்பது தெளிவு. "தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேற்றும்படி இதெல்லாம் நடந்தது" (21:4) என்பது மத்தேயு சுவிசேஷத்தில் அடிக்கடி வரும் சொல்விளக்கமாக உள்ளது. அவர் "பழைய ஏற்பாட்டிலிருந்து சுமார் 65 முறைகள் மேற்கோள் காண்பித்து அல்லது மறைமுகமாக உணர்த்தி இருக்கிறார், சிலவேளைகளில் எபிரெயப் பழைய ஏற்பாட்டையும் சிலவேளைகளில் கிரேக்க செப்துவஜிந்த் வேதாகமத்தையும் அவர் பயன்படுத்தினார்."[16] இந்த மேற்கோள்கள் "மோசேயின்*

நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும்" (லூக்கா 24:44) உட்பட. எபிரெய வேதாகமத்தின் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் எடுத்து உரைக்கப் பட்டுள்ளன.

மத்தேயு சுவிசேஷத்தில் பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் பல்வேறு வகைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றில் சில, கிறிஸ்துவில் மாத்திரமே நிறைவேறிய நேரடியான தீர்க்கதரிசனங்களாக இருக்கலாம். மற்றவை, அவற்றை உரைத்த தீர்க்கதரிசியின் காலத்தில், தங்கள் முதல் நிறைவேற்றத்தைக் கொண்டிருந்து, அதைத் தொடர்ந்து, கிறிஸ்துவுக்குள் தங்களின் மாபெரும் நிறைவேற்றத்தைக் கொண்டிருந்த, இரட்டை நிறைவேற்றத் தீர்க்கதரிசனங்களாக இருக்கலாம். மற்றும் சில குறிப்புகள் தனிச்சிறந்த வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளன. மாதிரி/எதிர்மாதிரி முறைமையின்படி, "எதிர்காலத்திற்கு வெளிப்படையான குறிப்பு எதையும் கொண்டுவராதவைகளான," மக்கள், நிகழ்வுகள் மற்றும் பழைய ஏற்பாட்டில் இருந்த நிறுவனங்கள், புதிய ஏற்பாட்டில் ஒரு நேரடியான இணைவு தரப்பட்டவைகளாக உள்ளன என்று ஃபிரான்ஸ் அவர்கள் விவாதித்தார்.[17]

மத்தேயு சுவிசேஷம், கிறிஸ்துவின் வம்சவரலாறு பற்றிய வரிசைக் கூற்றுடன் தொடங்குகிறது (1:1-17). அவரது குடும்ப வரிசை அமைவு என்பது புறஜாதியாருக்கு வேண்டுமானால் சிறிதளவே ஆர்வம் உடையதாக இருக்கலாம், ஆனால் யூதர்களுக்கு அது தீவிரமான ஆழ்ந்த சிந்தனைக்குரிய விஷயமாக இருந்தது. அவர்களைப் பொறுத்தமட்டில் அது, "தாவீதின் குமாரன்" என்ற இயேசுவின் உரிமைகோருதலையும், அதுபோன்ற பிறவற்றையும், தாவீதின் அரியணைக்கு அவர் உரிமையுள்ள வாரிசாக இருந்தார் என்பதையும், எழுத்தாளர் நிரூபிப்பதற்கு முற்றிலும் அவசியமாயிருந்தது.

## அமைவு முறை

மத்தேயு சுவிசேஷம், கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றை, வனப்புமிகுந்த வகையில் ஒருங்கமைத்து, வரிசைமுறையான வகையில் முன்வைக்கிறது. அடிப்படையில் இந்தப் புத்தகம், பதினோரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட முடியும். இவற்றில் ஆறு பிரிவுகள், இயேசுவின் செயல்களைப் பிரதானமாகத் தொகுத்துரைக்கின்றன,[18] இவைகள் போதனையின் ஐந்து பிரிவுகளுடன் மாற்றி மாற்றி தொகுக்கப்பட்டுள்ளன:

| எடுத்துரைப்பு: | போதனைப் பகுதிகள்: |
|---|---|
| *1:1-4:25* | *5:1-7:27* |
| *8:1-9:38* | *10:1-42* |
| *11:2-12:50* | *13:1-52* |
| *13:54-17:27* | *18:1-35* |
| *19:2-22:46* | *23:1-25:46* |
| *26:2-28:20* | |

ஒவ்வொரு பகுதியும், "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" (7:28, 29; 11:1; 13:53; 19:1; 26:1) என்பது போன்ற, மாற்ற உரைத்தல் ஒன்றைக் கொண்டு முடிகிறது.

## அற்புதங்கள்

இயேசு நிகழ்த்திய அற்புதங்களில், குறிப்பான இருபது அற்புதங்களை மத்தேயு பதிவு செய்துள்ளார். இவற்றில் மூன்று அற்புதங்கள் இந்த சுவிசேஷ விபரத்திற்கு மாத்திரமே உரியவைகளாக உள்ளன: பார்வை மீளப்பெற்ற, பார்வையற்றிருந்த இரு மனிதர்கள் (9:27-31), அசுத்த ஆவி பிடித்திருந்த, வாய்பேச இயலாதிருந்த ஒரு மனிதரைக் குணமாக்கியது (9:32, 33), மற்றும் மீனின் வாயில் இருந்து பேதுரு வரிசெலுத்த நாணயத்தைக் கண்டெடுத்தல் (17:24-27). மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அற்புதங்கள், பல்வேறு வியாதிகள் கொண்டிருந்தவர்களைக் குணமாக்கியது பற்றியவையாக உள்ளன: பெயர் குறிப்பிடப்படாத தொழுநோயாளி (8:2-4), நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் (8:5-13), பேதுருவின் மாமியார் (8:14, 15), கதேரேனே நாட்டில் அசுத்த ஆவி பிடித்திருந்தவர் (8:28-34), திமிர்வாதக்காரர் (9:2-8), உதிரப்போக்கு கொண்டிருந்த பெண் (9:20-22), சூம்பின கையுடைய மனிதர் (12:9-13), கானானியப் பெண் ஒருத்தியின் மகள் (15:21-28), அசுத்த ஆவி பிடித்திருந்த பையன் (17:14-21), மற்றும் எரிகோ நகருக்கு அருகில் பார்வையற்றிருந்த இரு மனிதர்கள் (20:29-34). வேறு பல அற்புதங்களையும் இயேசு நிகழ்த்தி இருந்தார்: புயலை அமர்த்தியது (8:23-27), யாவீருவின் மகளை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்தது (9:18-26), ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது (14:13-23), தண்ணீரின் மேல் நடந்தது மற்றும் புயலை அமர்த்தியது (14:24-33), நான்காயிரம் பேருக்கு உணவளித்தது (15:32-38), மற்றும் அத்தி மரத்தை சபித்தது (21:19-21). இவையாவும், "இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாக் கடலருகே வந்து, ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார். அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர், முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள். அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். ஊமையர் பேசுகிறதையும், ஊனர்சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (15:29-31) என்ற வார்த்தைகளினால் தொகுத்து உரைக்கப்படுகின்றன.

## போதனைகளும் உவமைகளும்

மத்தேயு சுவிசேஷம், இயேசுவின் போதனைகள் பற்றிய, மிகவும் விசாலமான விபரத்தைத் தருகிறது. குறைந்த பட்சம், இந்தப் புத்தகத்தின் 60 சதவிகிதம், இயேசு போதித்தவற்றின் மீது கவனம் குவிக்கிறது. இது நமக்கு, கர்த்தருடைய முதன்மையான உரையாடல்களில் ஆறை நமக்கு அளிக்கிறது, இவைகள், போதனைப் பகுதிகள் ஐந்திற்குள் வைக்கப்பட்டுள்ளன:

1. மலைப் பிரசங்கம் (அதிகாரங்கள் 5-7);
2. பன்னிருவருக்கு இயேசு பொறுப்பு ஒப்புவித்தல் (அதிகாரம் 10);
3. இராஜ்யத்தைப் பற்றிய உவமைகள் (அதிகாரம் 13);
4. இராஜ்யத்தில் வாழ்வு (அதிகாரம் 18);
5. வேதபாரகரையும் பரிசேயர்களையும் இயேசு பழித்துரைத்தல் (அதிகாரம் 23) மற்றும் ஒலிவ மலையில் அவரது தீர்க்கதரிசன

உரையாடல் (அதிகாரங்கள் 24; 25).[19]

மலைப்பிரசங்கம் என்பது மத்தேயு சுவிசேஷத்திற்கே உரியதாக உள்ளது. இதில் உள்ளவை போன்ற சில கருத்துக்கள் அடங்கியுள்ள, சமனான ஒரு இடத்திலே உரைக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தை லூக்கா சுவிசேஷம் உள்ளடக்குகிறது, ஆனால் இது மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்ட அதே உரையாக இல்லாதிருக்கலாம் (லூக்கா 6:17-49). மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரமே நியாயத்தீர்ப்பின் காட்சிகள் சித்தரிக்கப் படுகின்றன (அதிகாரங்கள் 13; 25).

உவமைகள் எவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன என்பதைப் பொறுத்து, மத்தேயு சுவிசேஷம் குறைந்த பட்சம் பதினான்கு உவமைகளைப் பதிவுசெய்துள்ளது, அவற்றில் பதினோரு உவமைகள், மத்தேயு சுவிசேஷ விபரத்திற்கே உரியவைகளாக உள்ளன. விதைப்பவனைப் பற்றிய உவமை (13:1-23), கடுகு விதையின் உவமை (13:31, 32) மற்றும் திராட்சத் தோட்டம் பற்றிய உவமை (21:33-41) ஆகியவை மற்ற சுவிசேஷங்களுடன் பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ள உவமைகளாக இருக்கின்றன. களைகள் (13:24-30, 36-43). புதைத்து வைக்கப்பட்ட புதையல் (13:44), மாபெரும் விலையுள்ள முத்து (13:45, 46), மீன்பிடிக்கும் வலை (13:47-50), வீட்டு உரிமையாளர் (13:51, 52), இரக்கமற்ற வேலைக்காரன் (18:23-35), திராட்சத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் (20:1-16), இரு மகன்கள் (21:28-32), இராஜாவின் மகனுடைய திருமணம் (22:2-14), பத்து கன்னிகைகள் (25:1-13), மற்றும் தாலந்துகள் (25:14-30) ஆகியவை மத்தேயு சுவிசேஷத்திற்கே உரிய உவமைகளாக உள்ளன.

## காலமும் இடமும்

முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும், கிறிஸ்தவப் பதிவேடுகளில், மத்தேயு சுவிசேஷம் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்பட்டு அல்லது மறைமுகமாக உரைக்கப்பட்டு உள்ளது என்ற உண்மையானது, முதலாம் நூற்றாண்டின் ஏதோ ஒரு காலத்தில் இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது என்பதற்குப் பலமான சாட்சியத்தைக் கொடுக்கிறது.[20] உபதேசவியலுக்கான போதுமான சாட்சியம் குறைவுபடும் அதே வேளையில், மத்தேயு சுவிசேஷம், கி.பி. 70ல் எருசலேம் நகரும் அதில் இருந்த தேவாலயமும் விழத்தள்ளப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டிருக்கலாம் என்று நம்புதல் நியாயமானதாக உள்ளது. மத்தேயு எழுதியபோது, அவை இரண்டும் நின்று கொண்டிருந்தன (24:2, 15-28). மற்றும் மத்தேயு 24ம் அதிகாரம், அணுகிக் கொண்டிருந்த எருசலேமின் அழிவுடன் கொண்டிருக்கும் தெளிவான தொடர்பு, இந்தக் கண்ணோட்டத்திற்கு ஆதரவை அளிக்கிறது. அந்த நகரம் ஏற்கனவே அழிக்கப் பட்டிருந்தது என்றால், "மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" மற்றும் "நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" என்ற இயேசுவின் புத்திமதிகளை (24:16, 20) மத்தேயு உள்ளடக்கியிருத்தல், தேவையற்றதாகக் காணப்படுகிறது. எருசலேம் ஏற்கனவே விழுந்து போயிருந்தது என்றால், அந்த உண்மையை மத்தேயு நிச்சயமாகக் குறிப்பிட்டு இருப்பார்.

பேதுருவும் பவுலும் ரோமாபுரியில் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டது என்பதை, இரேனியுஸ் அவர்கள் சான்றளித்து உறுதிப்படுத்தினார்.[21] அவரது உரை மதிப்புடையதாக இருந்தால், அது 60களின் தொடக்ககாலத்தை வேண்டுவதாக உள்ளது. இது எழுதப்பட்ட காலத்தை கி.பி. 42க்கும் 58க்கும் இடைப்பட்ட ஒரு காலம் என்று, J. W. மெக்கார்வீ அவர்கள், குறிப்பிட்டார். மத்தேயு சுவிசேஷம் முதலாவதாக எழுதப்பட்டிருந்தது என்றால், அது லூக்கா சுவிசேஷத்திற்கு அவரே குறிப்பிட்ட தேதியாகிய, செசரியாவில் பவுல் சிறைப்பட்டிருந்த காலமான கி.பி. 58-60க்கு முன்னதாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.[22]

மத்தேயு பலஸ்தீனத்தை விட்டு வெளியேறி வேறு இடத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யத் தயாரான போது அவர், தாம் பிரசங்கித்து இருந்தவற்றை எபிரெய மொழியில் எழுதினார் என்று எசூபியஸ் அவர்கள் உரைத்தார்.[23] இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பின்பு, பல ஆண்டுகளாக, பலஸ்தீனத்தில் மத்தேயு ஊழியம் செய்தார் மற்றும் அதன் பின்பு அவர், ரோமாபுரிப் பேரரசின் பல பகுதிகளில் சிதறியிருந்த யூதர்களுக்கு ஊழியம் செய்ய, ஊழியப்பயணங்களை மேற்கொண்டார் என்று பாரம்பரிய கருத்துத் தெரிவிக்கிறது. பாரம்பரியமானது, பெர்சியா (நவீன ஈரான்), எத்தியோப்பியா, சீரியா மற்றும் கிரேக்கு ஆகிய நாடுகளுடன் அவரது எழுத்தை இணைவிக்கவும் செய்கிறது.

இருப்பினும், மத்தேயு சுவிசேஷம் பலஸ்தீனத்திற்கு வெளியே எழுதப்பட்டதற்கான உறுதியான நிரூபணம் எதுவும் இல்லை என்றாலும், மத்தேயு சுவிசேஷம் சீரியாவின் அந்தியோகியாவில் எழுதப்பட்டது என்ற B. H. ஸ்டீரீட்டர் அவர்களின் முன்மொழிதல் பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.[24] மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்ட காலத்தைப் பற்றிய ஒரு நல்ல உரைக்கூற்றை வில்லியம் ஹென்ரிக்ஸன் அவர்கள் அளித்தார்:

> மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் மற்றும் தோற்ற இடம் ஆகியவை அதிகம் நிச்சயம் இல்லாது உள்ளன. பழைய ஏற்பாட்டில் மத்தேயு கொண்டிருந்த அறிவு மற்றும் எபிரெய தோல்சுருள்கள் அவருக்குக் கிடைத்திருந்தமை ஆகியவை, அப்படிப்பட்ட தோல் சுருள்கள் இன்னும் முழுமையடையாத நிலையில் பாதுகாக்கப் பட்டிருந்த இடமான ஜெப ஆலயம் இடிக்கப்பட்ட *காலத்தையும்* இந்த எழுத்து தோன்றிய *இடம்* அல்லது *பொதுவான பகுதி* என்ற வகையில் பலஸ்தீனத்தையும் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது ... கி.பி. 63-66 என்பது ஒருவேளை மிகவும் தொலைவில் இல்லை என்று நான் கருதுகிறேன். இது *அதிகம்* முன்னதாக இருந்திருக்க முடியாது, ஏனெனில் 27:8 மற்றும் 28:15 ஆகியவை, கல்வாரியில் இருந்து நீண்ட காலம் தாண்டியிருக்காது என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது.[25]

## நோக்கம்

“இந்த சுவிசேஷத்தின் நோக்கம் என்ன?” என்ற கேள்விக்குப் பதில் அளித்ததில் ஹென்ரிக்ஸென் அவர்கள் பின்வரும் தொகுப்புரையைக் கொடுத்தார்:

1. இருளின் அதிகாரத்தில் இருந்து வெளிச்சத்தின் அதிகாரத்திற்கு

*மாற்றப்படுதல்: அடிப்படையான ஆவிக்குரிய மாற்றத்தை இன்னமும் அனுபவித்திராத அந்த யூதர்களின் மனமாற்றம். இது, அவர்கள் மீது பொழியப்பட்டிருந்த மாபெரும் சிலாக்கியங்களை நினைவு படுத்தியதாகவும், தேவனுடைய அழைப்பைக் கவனித்து ஏற்றுக்கொள்ளுதலைப் புறக்கணிப்பதால் ஏற்படும் அழிவுக்குரிய விளைவுகளையும் நினைவு படுத்தியதாகவும் இருந்திருக்க வேண்டும் (10:5 முதல்; 11:25-29; 23:37-39).*

*2. மாற்றப்படுதல்: ஆவியானவரின் வல்லமையினால், (பெரும்பான்மையான) யூதர்களின் பகுதியில், அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்த வாழ்வில் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு, அவர்கள் தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தல். இவர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கு, பரலோகத்தில் உள்ள தேவனை மகிமைப்படுத்துவதற்கு, எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று காண்பிக்கப்பட்டனர் (4:19; 5:16, 43-48; 6:19 முதல்; 7:1 முதல், 24-27; முதலியவை).*

*3. கசப்பான விரோதிகளின் தாக்குதலுக்கு எதிராக தேவனுடைய சத்தியத்தின் உரிமை நிலைநாட்டப்படுதல் (5:17 முதல்; 6:2 முதல்; அதிகாரம் 12, 13:10 முதல், 54-58; 15:1-20; 16:1-4; அதிகாரம் 23 முதலியன).*

*4. சகல மக்களினத்திற்கும் சுவிசேஷ ஊழியம் (8:5-13; 15:21-28; 28:16-20).*[26]

## பெற்றுக்கொண்டவர்கள்

இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் யார் என்ற கேள்வியானது, இந்தப் புத்தகத்தின் தலைப்பு பற்றிய கலந்துரையாடலுக்கு ஒரு பகுதி பதில் அளித்துள்ளது. இருப்பினும் நாம், இந்தக் கேள்விக்கு இன்னும் அதிகம் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு கண்ணோட்டத்திற்குத் திரும்புவோமாக.

நசரேயனாகிய இயேசுவே, பழைய ஏற்பாடு முன்னுரைத்திருந்த மேசியாவாக இருந்தார் என்பதை முதன்மையாக நிரூபித்தல் என்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாக உள்ளது என்பதால் இது ஒரு யூதரால், யூத வாசகர்களுக்காக எழுதப் பட்டிருக்க வேண்டும். இயேசுவே கிறிஸ்து என்று யூதர்கள் நம்பி இணங்குவதற்காக, இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை மத்தேயு பயன்படுத்தினார். இயேசுவின் மேசியாத்துவ உண்மை நிலையை விவரிப்பதற்கு, பின்வரும் ஒரு சொற்றொடர் அல்லது அதைப்போன்ற ஒன்று, எழுத்தாளரால் தொடர்ந்து பயன்படுத்தப் பட்டுள்ளது: “தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது” *(1:22; காண்க 2:15, 17, 23; 3:3; 4:14; 8:17; 11:10, 13; 12:17; 13:14, 35; 15:7; 21:4, 42; 26:31, 56; 27:9).*

ஆபிரகாமில் இருந்து தாவீது வரையிலும் இருந்தவர்களுடன் கிறிஸ்துவின் உறவுமுறையைக் காண்பிக்கும் வம்சவரலாறு *(1:1-17)*, யூதர்களுக்கென்றே முதன்மையான மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டது என்ற கண்ணோட்டத்தை ஆதரிக்கும் இன்னொரு அம்சமாக இருந்தது. வம்சவரலாறுகள் யூதர்களுக்கு மிகவும் முக்கியமானவையாக இருந்தன, ஆனால் இவை புறஜாதியாருக்கு

சிறிதளவே ஆர்வம் உடையவையாக இருந்தன. கிறிஸ்து தேவனாக இருந்தபோதிலும், அற்புதமாகக் கர்ப்பத்தில் உருவானதன் மூலமாக அவர் மாம்சமானார். கன்னிப்பெண்ணாக இருந்த மரியாளிடத்தில் பிறந்ததன் மூலமாக, அவர் கீர்த்தி வாய்ந்த வம்சத்தின் நீண்ட வரிசையிலிருந்து வந்தார். அவர் "ஆபிரகாமின் குமாரனாக" இருந்தார், எனவே அவர் உடன்படிக்கையின் மகனாக இருந்தார். அவர் "தாவீதின் குமாரனாக"வும் இருந்தார், இது அவரை இஸ்ரவேல் நாட்டின் அரியணைக்கு உரிமைநிறைந்த வாரிசாக்கியது. "தாவீதின் குமாரன்" என்பது, இந்த சுவிசேஷத்தின் பிற்பகுதியில் மேசியாத்துவப் பட்டப்பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (9:27; 12:23; 15:22; 20:30, 31; 21:9, 15; 22:42).

விளக்கியுரைக்கப் பட்டிராத எபிரெய/அரமாயிக் வார்த்தைகள், மத்தேயு சுவிசேஷத்தின் வாசகர்களில். யூதர்களே மேலோங்கி இருந்தனர் என்ற உண்மை மேலும் செயல்விளக்கப் படுத்துகிறது. உதாரணமாக, "இயேசு" என்ற எபிரெயப் பெயரின் அர்த்தத்தை அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று அவர் யூகித்தார் (1:21). மத்தேயு ("கர்த்தர் இரட்சிக்கிறார்" என்ற) இதன் அர்த்தத்தைத் தரவில்லை என்பதால், புறஜாதியார் ஒருவர் ("அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்ற) வார்த்தைகளின் விளையாட்டைத் தவறவிடுவார். யூதப் பழக்க வழக்கங்களை மத்தேயு விளக்கப் படுத்துவது அவசியமற்றதாக இருந்தது. எடுத்துக்காட்டாக, அவர் தமது யூத வாசகர்கள், சடங்காச்சார கழுவுதல் பற்றிய பாரம்பரியத்தைப் புரிந்துகொள்வார்கள் என்று நினைத்த போது (15:2), மாற்கு தமது புறஜாதி வாசகர்களுக்கு அதை விபரமாக விளக்கப் படுத்தினார் (மாற்கு 7:3, 4). பலஸ்தீன நாட்டிற்குப் பழக்கப்பட்ட யூத வாசகர்களுக்கு விபரமாக விளக்கப்படுத்த தேவையற்ற புவியியல் ரீதியான விளக்கங்களையும் மத்தேயு விட்டுவிட்டார் (காண்க 24:3; மாற்கு 13:3).

இந்த சுவிசேஷத்தின் யூதத்துவப் பண்பில். யூதர்களின் இரட்சிப்பு பற்றி இயேசுவின் அக்கறை (10:5, 6; 15:24), நியாயப்பிரமாணம் குறித்து எழுத்தாளரின் எண்ணப்போக்கு (5:17-20), மற்றும் வேதபாரகர் பரிசேயர்கள் பற்றிய அவரது எண்ணப்போக்கு ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன. 23:2, 3ல் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது என்றாலும், அவர்கள் அதே அதிகாரத்தில் தங்கள் மாய்மாலத்திற்காகக் கண்டனம் பண்ணப்பட்டனர் (23:13-33).

மத்தேயு யூதர்களுக்கென்று முதன்மையாக எழுதுகையில், புறஜாதியார்கள் விலக்கப்பட்டிருக்கவில்லை (2:1-12; 4:15, 16; 8:5-13; 10:18; 12:18, 21; 15:21-28; 24:14; 28:19). இராபர்ட் M. கிரான்ட் அவர்களின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், "சுவிசேஷம் யூதர்களை மாத்திரமல்ல புறஜாதியாருக்கும் சென்றடைதல் - அல்லது முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் இது அறிவிக்கப்பட வேண்டும் (ரோமர் 1:16) என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதை அறிந்த ஒரு கிறிஸ்தவராக மத்தேயு இருந்தார்."[27]

மத்தேயு தமது சுவிசேஷ விபரத்தை, கிறிஸ்தவ யுகத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் எழுதினார் என்றும் கூறமுடியும், ஏனெனில் அவர் இயேசுவை மேசியா என்றும் மனித குமாரன் என்றும், சபையாகிய தமது இராஜ்யத்தின் மேன்மையான கர்த்தர் என்றும் அறிவித்தார்.

## வரைகுறிப்புகள்

*மத்தேயு சுவிசேஷத்திற்குப் பல்வேறு வரைகுறிப்புகள் முன்மொழியப் பட்டுள்ளன, அவை ஒவ்வொன்றும் இந்த சுவிசேஷத்தின் வெவ்வேறு அம்சத்தை வலியுறுத்துகின்றன. பின்வரும் வரைகுறிப்பு, இயேசுவின் பயணங்களினுடைய வரலாற்று வரிசைமுறையை வலியுறுத்துகிறது:*[28]

I. *அறிமுகம் (1:1-4:11)*
II. *கலிலேயாவில் ஊழியம் (4:12-13:58)*
III. *கலிலேயாவைச் சுற்றிலும் இருந்த பகுதிகளில் ஊழியம் (14:1-16:12)*
IV. *எருசலேமுக்குப் பயணம் (16:13-20:34)*
V. *எருசலேமில் நேருக்கு நேர் எதிர்கொள்ளுதல் (21:1-25:46)*
VI. *சிலுவையில் அறையப்படுதலும் உயிர்த்தெழுதலும் (26:1-28:20)*

*இன்னொரு வரைகுறிப்பு, முன்பு கலந்துரையாடப்பட்ட ஒருங்கமைப்பு மாதிரியுடன் தொடர்பு படுத்தப் பட்டுள்ளது, இது பதினொரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.*[29]

I. *இயேசுவைப் பற்றிய ஒரு அறிமுகம் (1-4)*
II. *இயேசுவின் நிபந்தனைகள்: மலை பிரசங்கம் (5-7)*
III. *இஸ்ரவேலுக்கு இயேசுவின் செயல்கள் (8; 9)*
IV. *அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் கட்டளை (10)*
V. *இயேசுவை இஸ்ரவேல் மக்கள் புறக்கணித்தல் (11; 12)*
VI. *இஸ்ரவேல் மக்களின் புறக்கணிப்பை விளக்கப்படுத்தும், இராஜ்யம் பற்றிய உவமைகள் (13)*
VII. *சபை என்ற தேவனுடைய புதிய மக்கள் (14-17)*
VIII. *இராஜ்யத்தில் வாழ்வு: மன்னிப்பும் ஒழுங்கு முறையும் (18)*
IX. *பாடுகளின் தொடக்கம் (19-22)*
X. *எருசலேம் மீது நியாயத்தீர்ப்பு மற்றும் இரண்டாம் வருகை (23-25)*
XI. *சிலுவையின் அறையப்படுதலும் உயிர்த்தெழுதலும் (26-28)*

*இந்த விளக்கவுரையில் பயன்படுத்தப் பட்டுள்ள வரைகுறிப்பு, இயேசுவின் வாழ்விலும் அவரது அரசத்துவத்திலும் உள்ள படிநிலைகளை வலியுறுத்துகிறது:*

I. *இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், தொடக்ககால வாழ்வும் (1:1-4:11)*
II. *இராஜாவின் ஊழியத்தினுடைய தொடக்கம் (4:12-10:42)*
III. *இராஜாவின் ஊழியத்திற்கு பதில்செயல் (11:1-12:50)*
IV. *இராஜாவின் ஊழியம் தொடருதல் (13:1-18:35)*
V. *சிலுவையை நோக்கி இராஜாவின் பயணம் (19:1-25:46)*
VI. *இராஜா கைதுசெய்யப்படுதல், விசாரணைகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் (26:1-27:66)*
VII. *இராஜாவின் உயிர்த்தெழுதலும் கட்டளையும் (28:1-20)*

குறிப்புகள்

[1]Eusebius *Ecclesiastical History* 3.24.6-7; 3.39.16; 6.25.4-6; Irenaeus *Against Heresies* 3.1.1. அகஸ்டீன் என்பவர், "[மத்தேயுவை] மாற்கு நெருங்கிப் பின்பற்றினார், மற்றும் இவர் [மாற்கு] அவருடைய மத்தேயுவினுடைய உதவியாளராகவும் சுருக்க உரையாளராகவும் காணப்படுகிறார்" என்று எழுதினார். (Augustine *Harmony of the Gospels* 1.2.4.) [2]மாற்கு சுவிசேஷத்தின் முன்னுரிமைக்கான ஆதாரத்தின் தர அளவையான கருத்துரு ஒன்று B. H. Streeter, *The Four Gospels: A Study of Origins* (London: Morrison and Gibb, 1924; reprint, London: Macmillan & Co., 1953), 151-98 என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. இந்தக் கண்ணோட்டத்திற்கான அறைகூவல்களுக்கு, William R. Farmer, *The Synoptic Problem* (New York: Macmillan Co., 1964) என்ற புத்தகத்தைக் காணவும். இவற்றில் முதலாவது கூறப்பட்டவர் மத்தேயு முதலில் எழுதப்பட்டது என்று விவாதித்தார். மேலும் Robert H. Stein, "Synoptic Problem," in *Dictionary of Jesus and the Gospels*, ed. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 784-92 என்ற புத்தகத்திலும் காணவும். [3]வேறுவகையில் குறிப்பிடப்படாத வரையில், வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களின் எண்ணிக்கை, Accordance®, © 2003, OakTree Software என்ற மென்பொருளைப் பயன்படுத்திய வகையில் கிரேக்க வசனத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. [4]"பரலோகம்" என்ற சொற்றொடர் தேவனைப் பற்றிச் சுற்றி வளைத்துப் பேசும் ஒரு வழிமுறையாக யூதர்களால் அடிக்கடி பயன்படுத்தப் பட்டது. [5]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 47. [6]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), lxxvi. [7]Ibid., 12. [8]France, 33. [9]Eusebius *Ecclesiastical History* 3.39.16; 6.25.4. [10]Ibid., 5.10.3.

[11]Irenaeus *Against Heresies* 3.1.1. [12]Jerome *Lives of Illustrious Men* 3; *Preface to Matthew*. [13]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 13. [14]Leon Morris, *The Gospel According to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 13. [15]Lewis, 14. [16]Henry Clarence Thiessen, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1943), 138. [17]France, 40. [18]சில வேளைகளில் இயேசுவின் போதனைகள் இந்த எடுத்துரைப்புப் பகுதிகளிலும் உள்ளடக்கப் பட்டுள்ளன. [19]23 மற்றும் 24 ஆகிய அதிகாரங்களில் உள்ள உரையாடல்களுக்கு இடையில் பலமான தொடர்பு ஒன்றுள்ளது. இயேசு, தமது சிந்தையில் எருசலேமின் அழிவு பற்றிய விஷயங்களைக் கொண்டவராக (அதிகாரம் 24), பரிசேயர்கள் மீது "ஐயோக்களை" உரைத்தார் (அதிகாரம் 23). பரிசேயர்களைப் பழித்துரைத்தலின் முடிவில் இயேசு, "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார் (23:38). [20]*1 Clement* 13.2; *2 Clement* 3.2; 4.2; *Didach*e 1.2-5; 3.7; 7.1; 8.2; 9.5; 13.2; Ignatius *Smyrnaeans* 1.1; *Polycarp* 2.2; *Barnaba*s 4.14; 5.9; Polycarp *Philippians* 2.3; 7.2.

[21]Irenaeus *Against Heresies* 3.1.1. [22]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 9-10. லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் பற்றிய McGarvey's கணக்கீடு, லூக்கா - நடபடிகள் ஆகியவை இரண்டு தொகுதியிலான ஒரே எழுதாக்கம் என்ற உண்மையின் அடிப்படையில் அமைந்தது. (லூக்கா 1:1-4; நடபடிகள் 1:1, 2). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், ரோமாபுரியில் பவுல், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிகழ்வுடன் முடிகிறது என்பதால் கி. பி 61-63 (நடபடிகள் 28:30, 31), அந்த வேளையில்

*அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதுவதை லூக்கா முடித்தார் என்று யூகிக்கப் படுகிறது. லூக்கா சுவிசேஷம் அப்போஸ்தலருடைய நடபடிகளுக்குச் சற்று முன்னர் எழுதப்பட்டது.* [23]Eusebius *Ecclesiastical History* 3.24.6. [24]Streeter, 502. [25]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 97. [26]Ibid., 98. [27]Robert M. Grant, *A Historical Introduction to the New Testament* (New York: Simon and Schuster, 1972), 130. [28]Adapted from France, 58. [29]Adapted from Dale C. Allison, Jr., “Matthew: Structure, Biographical Impulse and the *Imitatio Christi*” in *The Four Gospels 1992*, ed. F. Van Sebroeck, et al. (Leuven: Leuven University Press, 1992), 1208.

# விரிவாக்கப்பட்ட புறக்குறிப்பு

I. இராஜாவாகிய கிறிஸ்துவின் பிறப்பும் தொடக்ககால வாழ்வும் *(1:1-4:11)*
- *அ.* அதிகாரம் 1: இயேசுவின் பிறப்பு
  1. மேசியாவான இயேசுவின் வம்சவரலாறு (1:1-17)
  2. யோசேப்புக்கு அறிவிப்பும் கன்னியிடம் இருந்து இயேசு பிறத்தலும் (1:18-25)
- *ஆ.* அதிகாரம் 2: இயேசுவின் தொடக்க ஆண்டுகள்
  1. ஞானிகள் வருகை (2:1-12)
     - அ. எருசலேமுக்கு ஞானிகள் வருகை (2:1, 2)
     - ஆ. மார்க்கத்தலைவர்கள் வருமாறு ஏரோது ஆணையிடுதல் (2:3-6)
     - இ. ஞானிகளுடன் ஏரோதுவின் இரகசியக் கூட்டம் (2:7, 8)
     - ஈ. பெத்லகேமுக்கு ஞானிகள் வருகை (2:9-12)
  2. இயேசுவைப் பாதுகாத்தல் (2:13-23)
     - அ. எகிப்துக்கு ஓடிப்போகுதல் (2:13-15)
     - ஆ. ஏரோதுவின் கடுங்கோபம் (2:16-18)
     - இ. நாசரேத்தூர் திரும்புதல் (2:19-23)
- *இ.* அதிகாரம் 3: இயேசுவின் வருகைக்கும் அவரது ஞானஸ்நானத்திற்கும் ஆயத்தமாகுதல்
  1. இயேசுவின் முன்னோடி (3:1-12)
  2. இயேசுவின் ஞானஸ்நானம் (3:13-17)
- *ஈ.* அதிகாரம் 4: கிறிஸ்துவுக்கு சோதனைகள் (4:1-11)

II. இராஜாவின் ஊழியத்தினுடைய தொடக்கம் (4:12-10:42)
- *அ.* அதிகாரம் 4 (தொடர்ச்சி): இயேசுவின் ஊழியத்திற்கு அறிமுகம் (4:12-25)
  1. கப்பர்நகூமில் குடியமர்தல் (4:12-17)
  2. முதல் சீஷர்களை அழைத்தல் (4:18-22)
  3. கலிலேயாவில் தொடக்க ஊழியம் (4:23-25)
- *ஆ.* அதிகாரம் 5: மலைப்பிரசங்கம், பாகம் 1
  1. பாக்கியங்கள் (5:1-12)
  2. உப்பும் வெளிச்சமும் (5:13-16)
  3. நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றம் (5:17-20)
  4. கோபமும் கொலையும் (5:21-26)
  5. விபசாரம் (5:27-30)
  6. விவாகரத்து (5:31, 32)
  7. ஆணையிடுதல் (5:33-37)
  8. பழிவாங்குதல் (5:38-42)
  9. விரோதிகள் மீது அன்புகூருதல் (5:43-48)
- *இ.* அதிகாரம் 6: மலைப்பிரசங்கம், பகுதி 2

1. பொதுவான எச்சரிப்பு (6:1)
2. கொடுத்தல் (6:2-4)
3. ஜெபம் (6:5-15)
4. உபவாசம் (6:16-18)
5. பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் (6:19-21)
6. தெளிவான பார்வை (6:22, 23)
7. எஜமான்களின் தேர்வு (6:24)
8. கவலையை மேற்கொண்டு ஜெயித்தல் (6:25-34)

ஈ. அதிகாரம் 7: மலைப்பிரசங்கம், பாகம் 3
1. நீதியான நியாயத்தீர்ப்பு (7:1-6)
2. ஜெபத்தில் விடாமுயற்சி (7:7-11)
3. பொன் விதி (7:12)
4. நிறைவான புத்திமதிகள் (7:13-27)
   அ. இரு வெவ்வேறு வழிகள் (7:13, 14)
   ஆ. மரங்களின் இரு பிரிவுகள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகளின் கனிகள் (7:15-20)
   இ. சீஷர்களின் இரு வகைகள் (7:21-23)
   ஈ. கட்டுவோரின் இரு மாதிரிகள் (7:24-27)
5. கூட்டத்தின் திகைப்பு (7:28, 29)

உ. அதிகாரங்கள் 8 மற்றும் 9: அவரது அற்புதவிதமான சான்றுகள்
1. அற்புதங்களின் முதல் இணை (8:1-17)
   அ. தொழுநோயாளியைக் குணமாக்குதல் (8:1-4)
   ஆ. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்குதல் (8:5-13)
   இ. பேதுருவின் மாமியைக் குணமாக்குதல் (8:14, 15)
   ஈ. இயேசு குணமாக்குதல் பற்றிய ஒரு தொகுப்புரை (8:16, 17)
2. சீஷத்துவத்தின் விலை (8:18-22)
3. அற்புதங்களின் இரண்டாவது இணை (8:23-9:8)
   அ. புயலை அமர்த்துதல் (8:23-27)
   ஆ. அசுத்த ஆவி பிடித்திருந்த இரு மனிதர்களைக் குணமாக்குதல் (8:28-34)
   இ. திமிர்வாதக்காரனைக் குணமாக்குதல் (9:1-8)
4. சீஷத்துவத்திற்கு அழைப்பு (9:9-17)
   அ. மத்தேயுவை அழைத்தல் (9:9)
   ஆ. பாவிகளுக்கு இயேசுவின் அழைப்பு (9:10-13)
   இ. சீஷத்துவமும் உபவாசமும் (9:14-17)
5. அற்புதங்களின் மூன்றாவது இணை (9:18-34)
   அ. உதிரப்போக்குடைய பெண்ணைக் குணமாக்குதல் மற்றும் யாவீருவின் மகளை உயிரோடு எழுப்புதல் (9:18-26)
   ஆ. பார்வையற்ற இரு மனிதர்களைக் குணமாக்குதல் (9:27-31)

இ. ஊமையும் அசுத்த ஆவி பிடித்திருந்தவனுமான ஒரு மனிதனைக் குணமாக்குதல் (9:32-34)

6. இயேசுவின் ஊழியம் பற்றிய ஒரு தொகுப்புரை (9:35-38)

ஊ. அதிகாரம் 10: அவரது செய்தியாளர்கள், அவர்களின் ஊழியம் மற்றும் செய்தி

1. பன்னிரு அப்போஸ்தலர்களுக்கு அவரது கட்டளை (10:1-4)
2. எல்லைக்குட்பட்ட அவரது கட்டளை (10:5-15)
3. அவரது எச்சரிக்கைகள் (10:16-23)
4. அவரது பிற அறிவுறுத்துதல்கள் (10:24-42)

III. இராஜாவின் ஊழியத்திற்கு பதில் செயல் (11:1-12:50)

அ. அதிகாரம் 11: அவரது செயல்களைக் கண்டவர்களால்

1. யோவான் ஸ்நானனும் இயேசுவும் (11:1-19)
2. மனந்திரும்பாத நகரங்கள் (11:20-24)
3. இயேசுவின் ஜெபமும் அவரது மாபெரும் அழைப்பும் (11:25-30)

ஆ. அதிகாரம் 12: பரிசேயர்களால்

1. ஓய்வுநாள் பற்றிய கேள்விகள் (12:1-14)
2. ஒரு இடை உரை: இயேசுவின் ஓய்வு (12:15-21)
3. இயேசுவின் அதிகாரத்திற்கு ஒரு அறைகூவல் (12:22-37)
4. ஒரு அடையாளம் கேட்கப்படுதல் (12:38-45)
5. ஒரு பின்னுரை: இயேசுவின் உண்மையான உறவினர்கள் (12:46-50)

IV. இராஜாவின் ஊழியம் தொடருதல் (13:1-18:35)

அ. அதிகாரம் 13: இராஜ்யம் பற்றிய உவமைகள்

1. விதைப்பவனைப் பற்றிய உவமை (13:1-9)
2. உவமைகளின் நோக்கம் (13:10-17)
3. விதைப்பவன் பற்றிய உவமையின் விளக்கம் (13:18-23)
4. மூன்று உவமைகள் (13:24-33)
   - அ. களைகள் (13:24-30)
   - ஆ. கடுகு விதை (13:31, 32)
   - இ. புளித்த மா (13:33)
5. உவமைகளின் நோக்கம் (13:34, 35)
6. களைகள் பற்றிய விளக்கம் (13:36-43)
7. இன்னும் மூன்று உவமைகள் (13:44-50)
   - அ. புதைத்து வைக்கப்பட்ட புதையல் (13:44)
   - ஆ. விலையுயர்ந்த முத்து (13:45, 46)
   - இ. மீன்பிடி வலை (13:47-50)
8. முடிவுரையான ஒரு உவமை: வீட்டு எஜமானாகிய மனிதன் (13:51, 52)
9. நாசரேத்தூரில் புறக்கணிக்கப்படுதல் (13:53-58)[1]

ஆ. அதிகாரம் 14: இயேசுவின் ஊழியத்திற்கு மேலும் பதில் செயல்

(பகுதி 1)

1. யோவான் ஸ்நானனின் மரணம் (14:1-12)
    - அ. இயேசுவைப் பற்றி ஏரோதுவின் தவறான கண்ணோட்டம் (14:1, 2)
    - ஆ. யோவான் கைது செய்யப்படுதல் மற்றும் மரணம் ஆகியவை பற்றிய பதிவு (14:3-12)
2. ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் (14:13-21)
    - அ. இயேசு தனித்துப் போகுதல் (14:13, 14)
    - ஆ. கூட்டத்தினருக்கு இயேசு உணவளித்தல் (14:15-21)
3. தண்ணீரின் மேல் நடத்தல் (14:22-33)
    - அ. இயேசு தனித்திருந்து ஜெபித்தல் (14:22, 23)
    - ஆ. இயேசு தண்ணீரின் மேல் நடத்தல் (14:24-27)
    - இ. இயேசுவினிடத்திற்குப் பேதுரு தண்ணீரின் மீது வருதல் (14:28-33)
4. கூடுதலான குணமாக்குதல்கள் (14:34-36)

இ. அதிகாரம் 15: இயேசுவின் ஊழியத்திற்கு மேலும் பதில்செயல் (பகுதி 2)

1. பரிசேயர்களுடன் போராட்டம் (15:1-20)
    - அ. மனிதர்களின் பாரம்பரியங்கள் எதிர். தேவனுடைய நியாயப்பிரமாணம் (15:1-9)
    - ஆ. உண்மையான தீட்டுப்படுதல் (15:10-20)
2. கானானியப் பெண்ணின் விசுவாசம் (15:21-28)
3. புறஜாதியார் மத்தியில் வரவேற்பு (15:29-39)
    - அ. கூட்டத்தினரை இயேசு குணமாக்குதல் (15:29-31)
    - ஆ. நாலாயிரம் பேருக்கு இயேசு உணவளித்தல் (15:32-39)

ஈ. அதிகாரம் 16: இயேசுவின் ஊழியத்திற்கு மேலும் பதில் செயல் (பகுதி 3)

1. அடையாளம் வேண்டும் என்ற மக்களின் விருப்பம் (16:1-4)
2. இயேசு தமது சீஷர்களை எச்சரித்தல் (16:5-12)
3. நல்ல அறிக்கை மற்றும் இயேசு தமது சபையைக் கட்டுவார் என்ற அவரது அறிவிப்பு (16:13-20)
4. சிலுவை அணுகுதல் மற்றும் வரவிருந்த தமது மரணத்தைப் பற்றிய இயேசுவின் முதல் அறிவிப்பு (16:21-23)
5. சீஷத்துவத்தின் விலை பற்றிய இயேசுவின் அறிவிப்பு (16:24-27)
6. அங்கிருந்த சிலர் இராஜ்யத்தைக் காண்பார்கள் என்ற இயேசுவின் வாக்குத்தத்தம் (16:28)

உ. அதிகாரம் 17: இயேசுவின் ஊழியத்திற்கு மேலும் பதில்செயல் (பகுதி 4)

1. மறுரூபமாகுதல் (17:1-13)
    - அ. மலையில் இயேசு மகிமைப்படுதல் (17:1-8)
    - ஆ. எலியாவைப் பற்றி சீஷர்களின் கேள்வி (17:9-13)
2. அசுத்த ஆவி பிடித்திருந்த மகனைக் குணமாக்குதல்

*(17:14-21)*

- அ. பையனை இயேசு குணமாக்குதல் *(17:14-18)*
- ஆ. சீஷர்களின் தோல்வி பற்றிய இயேசுவின் விளக்கம் *(17:19-21)*

3. வரவிருந்த தமது மரணத்தைப் பற்றி இயேசுவின் இரண்டாம் அறிவிப்பு *(17:22, 23)*
4. வரி செலுத்துதல் *(17:24-27)*

உ. அதிகாரம் 18: இராஜ்யத்தில் உறவுமுறைகள்

1. இராஜ்யத்தில் பெரியவர் *(18:1-4)*
2. இடறுதலுக்கான தடைகளுக்கு எதிராக எச்சரிக்கை *(18:5-9)*
3. காணாமற்போன ஆடு பற்றிய உவமை *(18:10-14)*
4. போராட்டங்களைத் தீர்த்தல் *(18:15-20)*
5. இரக்கமற்ற வேலைக்காரன் பற்றிய உவமை *(18:21-35)*

V. சிலுவையை நோக்கி இராஜாவின் பயணம் *(19:1-25:46)*

அ. அதிகாரம் 19: பெரோயாவிலும் யூதேயாவிலும் இயேசுவின் ஊழியம் (பகுதி 1)

1. விவாகரத்து பற்றி கேள்வி கேட்கப்படுதல் *(19:1-12)*
   - அ. பெரோயாவிற்கு இயேசுவின் பயணம் *(19:1, 2)*
   - ஆ. பரிசேயர்களின் கேள்வி *(19:3-9)*
   - இ. சீஷர்களின் பதிலுரை *(19:10-12)*
2. பிள்ளைகளை ஆசீர்வதித்தல் *(19:13-15)*
3. செல்வம் மற்றும் சீஷத்துவம் மீதான போதனை *(19:16-30)*
   - அ. செல்வந்தரும் இளைஞருமான அதிகாரியின் கேள்வி *(19:16-22)*
   - ஆ. இயேசுவின் மதிப்பீடு *(19:23-26)*
   - இ. அப்போஸ்தலர்களின் தியாகம் *(19:27-30)*

ஆ. அதிகாரம் 20: பெரோயாவிலும் யூதேயாவிலும் இயேசுவின் ஊழியம் (பகுதி 2)

1. திராட்சத் தோட்டத்து வேலைக்காரர்கள் பற்றிய உவமை *(20:1-16)*
2. வரவிருந்த தமது மரணத்தைப் பற்றி இயேசுவின் மூன்றாம் அறிவிப்பு *(20:17-19)*
3. இராஜ்யத்தில் பெரியவராயிருத்தல் *(20:20-28)*
4. பார்வையற்ற இரு மனிதர்களுக்குப் பார்வையை மீட்டுக்கொடுத்தல் *(20:29-34)*

இ. அதிகாரம் 21: எருசலேமில் இயேசு: போராட்டம்

1. வெற்றிப் பிரவேசம் *(21:1-11)*
   - அ. ஆயத்தப்படுத்தல் *(21:1-7)*
   - ஆ. வரவேற்பு *(21:8-11)*
2. தேவாலயத்தைச் சுத்திகரித்தல் *(21:12, 13)*
3. எருசலேமில் குணமாக்குதலின் கடைசி அற்புதங்கள் *(21:14-17)*

4. அத்தி மரத்தை சபித்தல் (21:18-22)
5. இயேசுவின் அதிகாரத்திற்கு அறைகூவல் (21:23-27)
6. உவமைகளின் ஒரு வரிசை (21:28-46)
   அ. இரு மகன்கள் பற்றிய உவமை (21:28-32)
   ஆ. நில உரிமையாளர் மற்றும் திராட்சத்தோட்டம் பற்றிய உவமை (21:33-46)

ஈ. அதிகாரம் 22: எருசலேமில் இயேசு: அவரது எதிராளிகள்
1. உவமைகளின் ஒரு வரிசை முடிக்கப்படுதல்: இராஜாவின் மகனுடைய திருமணம் பற்றிய உவமை (22:1-14)
2. இயேசு தமது விரோதிகளுக்குப் பதில் அளித்தல் (22:15-46)
   அ. வரிசெலுத்துதல் பற்றிய கேள்வி (22:15-22)
   ஆ. உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வி (22:23-33)
   இ. பிரதான கட்டளை பற்றிய கேள்வி (22:34-40)
   ஈ. மேசியாவைப் பற்றிய கேள்வி (22:41-46)

உ. அதிகாரம் 23: எருசலேமில் இயேசு: தலைவர்கள் மீது ஏழு சாபங்கள்
1. தலைமைத்துவத்திற்கு அவரது எச்சரிக்கை (23:1-12)
2. அவரது ஏழு சாபங்கள் (23:13-36)
3. எருசலேம் நகரைப் பற்றி அவரது புலம்புதல் (23:37-39)

ஊ. அதிகாரம் 24: எருசலேமில் இயேசு: அதன் அழிவு மற்றும் அவரது இரண்டாம் வருகை பற்றிய அவரது போதனை
1. எருசலேமின் அழிவு பற்றிய அவரது முன்னுரைப்பு (24:1, 2)
2. சீஷர்களின் கேள்விகள் (24:3)
3. எருசலேமின் அழிவுக்கு முந்திய சூழ்நிலை (24:4-14)
   அ. "தவறாக வழிநடத்தப்படாதிருங்கள்" (24:4-8)
   ஆ. ''உங்களுக்கு வரும் பல சோதனைகள் பற்றி எச்சரிக்கையாயிருங்கள்" (24:9-14)
4. எருசலேமின் அழிவு (24:15-35)
   அ. "பாழாக்குகிற அருவருப்பை நீங்கள் காணும்போது, ஓடிப்போங்கள்" (24:15-22)
   ஆ. "கள்ள கிறிஸ்துக்களை நம்பாதீர்கள்" (24:23-28)
   இ. ''மனித குமாரனின் அடையாளம் காணப்படும்'' (24:29-31)
   ஈ. ''இந்த தலைமுறைக்குள்ளாகவே எருசலேம் அழிக்கப்படும்" (24:32-35)
5. இரண்டாம் வருகை (24:36-51)
   அ. ''அந்த வேளையை எவரொருவரும் அறியார்'' (24:36-41)
   ஆ. "தயாராக இருங்கள்" (24:42-51)

எ. அதிகாரம் 25: எருசலேமில் இயேசு: முடிவு காலம் பற்றிய அவரது உவமைகள்
1. பத்து கன்னிகைகள் பற்றிய உவமை (25:1-13)
2. தாலந்துகள் பற்றிய உவமை (25:14-30)

3. செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிக்கும் மேய்ப்பன் பற்றிய உவமை (25:31-46)

VI. இராஜா கைதுசெய்யப்படுதல், விசாரணைகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் (26:1-27:66)

அ. அதிகாரம் 26: இயேசு கைதுசெய்யப்படுதல் மற்றும் யூதரின் விசாரணை

1. இயேசுவைக் கொலை செய்யத் திட்டம் (26:1-5)
2. இயேசு அபிஷேகம் செய்யப்படுதல் (26:6-13)
3. இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்ளுதல் (26:14-16)
4. பஸ்கா (26:17-29)
   அ. ஆயத்தப்படுதல் (26:17-19)
   ஆ. காட்டிக்கொடுப்பவன் பற்றிய அறிவிப்பு (26:20-25)
   இ. கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்துதல் (26:26-29)
5. ஒலிவ மலையின் மீது (26:30-46)
   அ. அப்போஸ்தலர்களின் மறுதலிப்பைப் பற்றிய ஒரு அறிவிப்பு (26:30-35)
   ஆ. துக்கத்தின் வேளை (26:36-38)
   இ. ஜெபத்தின் வேளை (26:39-46)
6. இயேசு கைது செய்யப்படுதல் (26:47-56)
   அ. யூதாஸின் காட்டிக்கொடுக்கும் முத்தம் (26:47-50)
   ஆ. பேதுருவின் தாக்கும் பட்டயம் (26:51-54)
   இ. கும்பலை இயேசு கடிந்துகொள்ளுதல் (26:55. 56)
7. யூத விசாரணை (26:57-68)
8. பேதுருவின் மறுதலிப்புகள் (26:69-75)

ஆ. அதிகாரம் 27: இயேசு ரோம விசாரணைக்கு உட்படுத்தப்படுதல் மற்றும் அவர் சிலுவையில் அறையப்படுதல்

1. ஆலோசனை சங்கத்தின் தீர்ப்பு (27:1, 2)
2. யூதாஸின் மனக்கசப்பும் மரணமும் (27:3-10)
3. ரோம விசாரணை, பகுதி 1 (27:11-14)
4. ரோம விசாரணை, பகுதி 2 (27:15-31)
   அ. பிலாத்து முன்மொழிந்த தீர்வு (27:15-18)
   ஆ. கும்பலின் அலறல் (27:19-23)
   இ. மக்களுக்கு பிலாத்து இணங்குதல் (27:24-26)
   ஈ. போர்வீரர்களின் ஏளனம் (27:27-31)
5. கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் (27:32-56)
   அ. சிலுவையை நோக்கி பயணம் (27:32)
   ஆ. இடம் (27:33, 34)
   இ. சிலுவையில் அறையப்பட்ட வகை (27:35-37)
   ஈ. அவருடன் சிலுவையில் அறையப்பட்டவர்கள் மற்றும் அதிகமாக ஏளனங்கள் (27:38-44)

உ. *சிலுவையில் அறையப்படுதலின் முடிவு மற்றும் அங்கு நடைபெற்ற அடையாளங்கள் (27:45-54)*

ஊ. *தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த பெண்கள் (27:55, 56)*

6. *கிறிஸ்துவின் உடல் அடக்கம் பண்ணப்படுதல் (27:57-61)*
7. *பிலாத்துவின் முன்னெச்சரிக்கை கட்டளை (27:62-66)*

VII. *இராஜாவின் உயிர்த்தெழுதலும் கட்டளையும் (28:1-20)*

அ. *அதிகாரம் 28: இயேசுவின் உயிர்த்தெழுதல் (28:1-15)*

1. *வெறுமையான கல்லறை (28:1-7)*
2. *திகைத்த சாட்சிகள் (28:8-10)*
3. *தவறான அறிக்கை (28:11-15)*

ஆ. *அதிகாரம் 28 (தொடர்ச்சி): பிரதான கட்டளை (28:16-20)*

---

குறிப்பு

[1]*13ம் அதிகாரத்திற்கான வரைகுறிப்பு,* R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 65 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டது.*